
# புவி வட்ட இறுதி சுற்றுப் பாதையில் சந்திரயான்-3 !



**சென்னை, ஜூலை 25:** நிலவை நோக்கி பயணித்து வரும் சந்திரயான்-3 விண்கலம், புவி வட்டத்தின் இறுதி சுற்றுப் பாதைக்குள் வெற்றிகரமாக செவ்வாய்க்கிழமை செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி நிலவின் நீள் வட்டப் பாதைக்குள் விண்கலம் பயணிக்கத் தொடங்கும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவின் தென் துருவத்துக்கு மிக அருகில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்து, எல்விஎம்-3 ராக்கெட் மூலம் கடந்த 14-ஆம் தேதி விண்ணில் செலுத்தியது.

குறைந்தபட்சம் 170 கி.மீ தொலைவும், அதிகபட்சம் 36,500 கி.மீ. தொலைவும் கொண்ட புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் நிலைநிறுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து விண்கலத்தின் சுற்றுப் பாதையை உயர்த்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவு ஐந்தாவது முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு: சந்திரயான்-3 விண்கலம் புவிக்கு அருகே ஒவ்வொரு முறை சுற்றிவரும் போதும் அதிலுள்ள உந்து விசை இயக்கப்பட்டு சுற்றுப்பாதை தொலைவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை தொலைவு தற்போது ஐந்தாவது முறையாக செவ்வாய்க்கிழமை மதியம் 2.30 மணியளவில் அதிகரிக்கப்பட்டது.

அதன்படி குறைந்தபட்சம் 236 கிமீ தொலைவும், அதிகபட்சம் 1,27,609 கிமீ தொலைவும் கொண்ட சுற்றுப்பாதைக்கு விண்கலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அடுத்தகட்டமாக சந்திரயான் விண்கலம் ஆகஸ்ட் 1-ஆம் தேதி புவிவட்டப்பாதையில் இருந்து விலக்கப்பட்டு நிலவின் சுற்றுப்பாதைக்குள் உந்தித் தள்ளப்படும்.

அதன்பின்னர், திட்டமிட்டபடி ஆக. 23-ஆம் தேதி விண்கலம் நிலவில் மெதுவாக தரையிறக்கப்படும் என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிஎஸ்எல்வி சி-56:** இதனிடையே, சிங்கப்பூருக்கு சொந்தமான 7 செயற்கைக்கோள்களை வணிகரீதியாக பிஎஸ்எல்வி சி-56 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதல் ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தும் திட்டம் வரும் 30-ஆம் தேதி செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த ராக்கெட் ஏவுதலை பொதுமக்கள் நேரில் பார்வையிட இஸ்ரோ அழைப்பு விடுத்துள்ளது. விருப்பமுள்ளவர்கள் https://lvg.shar.gov.in/ என்ற இணையதளம் வழியாக முன்பதிவு செய்ய வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு அந்த இணையப் பக்கத்தை அணுகலாம் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# இந்திய மக்கள்தொகை 139 கோடி

**புது தில்லி, ஜூலை 25:** மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் தரவுகள்படி, இந்திய மக்கள்தொகை 139 கோடி என மத்திய அரசு செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

இது குறித்து மக்களவையில் மத்திய உள் துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் மக்கள்தொகைக்கான தேசிய ஆணையத்தின் தொழில்நுட்பக் குழு, நாட்டின் மக்கள்தொகை குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஜூலை 1-ஆம் தேதி நிலவரப்படி நாட்டின் மக்கள்தொகை 139 கோடி 23 லட்சத்து 29 ஆயிரமாகும்.

இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு முதல், பட்டியல் மற்றும் பழங்குடியினர் தவிர்த்து பிற ஜாதியினரின் எண்ணிக்கை குறித்த தகவல் சேகரிக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இலங்கை கடற்படை: 9 தமிழக மீனவர்கள் சிறைபிடிப்பு

**ராமேசுவரம், ஜூலை 25:** கச்சத்தீவு-நெடுந்தீவுக்கு இடையே மீன்பிடித்துக்கொண்டிருந்த மண்டபம் மீனவர்கள் 9 பேரை இரண்டு விசைப் படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் செவ்வாய்க்கிழமை சிறைபிடித்துச் சென்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் படகு தளத்திலிருந்து திங்கள்கிழமை 300-க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள், மீன்வளத் துறை அனுமதி பெற்று கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் திங்கள்கிழமை நள்ளிரவு கச்சத்தீவு-நெடுந்தீவுக்கு இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு 5 ரோந்து கப்பல்களில் வந்த இலங்கைக் கடற்படையினர் வேலு, நாகநாதன் (என்கிற)தட்சிணாமூர்த்தி ஆகிய இருவருக்குச் சொந்தமான விசைப் படகுகளையும் சிறைபிடித்தனர். மேலும், படகுகளில் இருந்த சுரேஷ் (38), ஆறுமுகம் (49), மணிகண்டன் (43), குமார் (37), ஜெயசீலன் (55), வேல்முருகன் (52), முத்து இருளாண்டி (58), சிவத்த பொறியன், நல்லதம்பி ஆகிய 9 மீனவர்களையும் கைது செய்து, காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு சென்று நீரியல் துறையினரிடம் செவ்வாய்க்கிழமை ஒப்படைத்தனர்.

இதையடுத்து, எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மீனவர்கள் மீது வழக்குப் பதிந்து, ஊர்க்காவல்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். மீனவர்களிடம் விசாரணை நடத்திய நீதிபதி கஜநிதிபாலன், மீனவர்கள் 9 பேரையும் ஆக. 8-ஆம் தேதி வரை நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்த மீனவ சங்கத்தினர் கைது செய்யப்பட்ட மீனவர்கள், அவர்களது விசைப் படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மண்டபம் மீனவர்கள்.

## மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை தேவை: வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

**சென்னை, ஜூலை 25:** இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 9 பேரை விடுவிக்க தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு செவ்வாய்க்கிழமை எழுதிய கடிதம்:

**தொடரும் சிறைபிடிப்பு:** தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து சிறைபிடிக்கப்படும் சம்பவங்கள் நீண்டகாலமாக தொடர்கிறது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க தூதரக அளவிலான முயற்சிகளை விரைவுபடுத்த வேண்டுமென அண்மையில் எழுதிய கடிதத்தில் கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனாலும், தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவது குறித்து ஆழ்ந்த கவலையுடனும், ஏமாற்ற உணர்வுடனும் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

இந்தியாவுக்கு இலங்கை அதிபர் அரசுமுறைப் பயணமாக சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது, தமிழக மீனவர்கள் தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை குறித்து இந்தியப் பிரதமர் மோடி விவாதிக்க வேண்டுமென வலியுறுத்தி இருந்தேன். பிரதமர் மோடியும், இலங்கை அதிபரும் சந்திப்பதன் மூலம் மீனவர்கள் பிரச்னையில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கும், இரு நாட்டு மீனவர்களின் உரிமைகள், வாழ்வாதாரங்களை மதிக்கும் வகையில், நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கும் வழி ஏற்படும் என நம்பியிருந்தேன்.



**9 மீனவர்கள் கைது:** இந்த சூழ்நிலையில், இந்தியா, இலங்கை நாடுகளுக்கு இடையே உயர்நிலை அளவில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்பது மீனவர்கள், அவர்களது 2 விசைப் படகுகளுடன் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு, படகுகள் பறிமுதல் செய்யப்படுவதால், கடும் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவங்கள் இருதரப்பு உறவுகளை சீர்குலைத்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கடுமையான சமூக - பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

**நிரந்தரத் தீர்வு தேவை:** இந்த நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்ட அவர்களது படகுகளை பாதுகாப்பாக திரும்ப ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாக். வளைகுடா பகுதியில் மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திட, இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வை காண வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக, சாத்தியமான அனைத்துதூதரகநடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அந்த கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# கருணாநிதி குறித்த சாகித்திய அகாதெமி நூல்

## முதல்வரிடம் அளிப்பு



முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்து தான் எழுதி சாகித்திய அகாதெமி வெளியிட்ட 'இந்திய இலக்கியச் சிற்பிகள் – கலைஞர் மு.கருணாநிதி' என்ற நூலை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் செவ்வாய்க்கிழமை வழங்கிய தமிழ்ப் பல்கலை. முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன். உடன் சாகித்திய அகாதெமி அலுவலர் சந்திரசேகர ராஜ், வெளியீட்டுப் பிரிவு அலுவலர் சீனிவாசன்.

**சென்னை, ஜூலை 25:** சாகித்திய அகாதெமியின் வெளியீடான, 'இந்திய இலக்கியச் சிற்பிகள்–கலைஞர் மு.கருணாநிதி' நூல் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அளிக்கப்பட்டது. இதை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ம.இராசேந்திரன் நேரில் அளித்தார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் கலை இலக்கியப் பங்களிப்பு, அவரது அரசியல் மற்றும் வரலாறு ஆகியவற்றின் பின்னணியில் இந்திய இலக்கியச் சிற்பிகள்–கலைஞர் மு.கருணாநிதி என்ற நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்த நூலை முன்னாள் துணை வேந்தர் ம.இராசேந்திரன் தொகுத்துள்ளார். இதனை சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது. சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை செவ்வாய்க்கிழமை சந்தித்து, இந்த நூலை ம.இராசேந்திரன் வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது, சென்னை சாகித்திய அகாதெமி அலுவலர் சந்திரசேகர ராஜ், வெளியீட்டுப் பிரிவு அலுவலர் சீனிவாசன் ஆகியோர் உடனிருந்ததாக தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'இந்தியா' அணியின் வெற்றிக்காக பாடுபடுகிறோம்

## முதலமைச்சர் ஸ்டாலின் சூசகம்



**சென்னை, ஜூலை 25:** 'இந்தியா' அணியின் வெற்றிக்காக, தாங்கள் உத்வேகத்துடன் பாடுபட்டு வருவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளின் நிறைவு விழாவில் பேசிய அவர், எதிர்க்கட்சிகளின் ஒன்றுபட்ட அணியான 'இந்தியா'வின் பெயரை சூசகமாக குறிப்பிட்டார்.

முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்தன. மாநில அளவிலான போட்டிகளின் நிறைவு விழா, சென்னை நேரு உள்விளையாட்டரங்கில், செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: விளையாட்டுக் களத்தில் 'டீம் ஸ்பிரிட்' எனப்படும் சொல்லாடலை குறிப்பிடுவார்கள்.

விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் போதும் பல்வேறு துறையினருடன் இணைந்து செயல்படக் கூடிய 'டீம் ஸ்பிரிட்' தேவை. அந்த வகையில், போட்டிகளை நடத்துவதற்கான சிறப்பான சூழலை உருவாக்கியதில் அரசு நற்பெயரை பெற்றிருக்கிறது. போட்டிகளில் பரிசுகள் வழங்குவதோடு, அரசின் கடமை முடிந்து விடவில்லை.

விளையாட்டு வீரர்களை மதித்து, அன்புடன் வரவேற்று அவர்களுக்கு வெற்றிகரமான சூழலையும் உருவாக்கித் தர வேண்டியது அரசின் கடமையாகும். அதனை விளையாட்டுத் துறை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறது.

விளையாட்டுப் போட்டிகளில் பலருக்குப் பதக்கங்கள் கிடைக்காமல் போயிருக்கலாம். அது முக்கியமல்ல. பங்கேற்புதான் முக்கியம். விளையாட்டில் வெற்றி என்பதே பங்கேற்பதும், சளைக்காமல் போராடுவதும்தான். தனிப்பட்ட முறையில் எனக்கு விளையாட்டின் மீது இருக்கும் ஆர்வத்தைப் பலரும் அறிவீர்கள்.

**'இந்தியா' அணி:** எங்கள் அணியும் 'இந்தியா' அணிதான். அதன் வெற்றிக்காகத்தான் நாங்களும் ஒருங்கிணைந்து 'டீம் ஸ்பிரிட்'டுடன் பாடுபடுகிறோம். விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிப்பதைப் போன்றே, விளையாட்டு மீதான ஆர்வத்தை அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஏற்படுத்த வேண்டும். வெற்றிக்காக பாடுபட வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### உதயநிதிக்கு பாராட்டு

முதலமைச்சர் கோப்பை போட்டிகளை சிறப்பாக நடத்தியதற்காக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுத் தெரிவித்தார்.

முதலமைச்சர் கோப்பை போட்டிகளின் நிறைவு விழாவில், அவர் பேசியதாவது:

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் அமைச்சராக உதயநிதி பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறை புத்துணர்வு பெற்றுள்ளது. நாள்தோறும் ஏராளமான போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

எப்போது பார்த்தாலும் விளையாட்டு வீரர்களுடன் அமைச்சர் உதயநிதி இருக்கிறார். விளையாட்டுத் துறையால் அமைச்சர் பெருமையடைவதும், அமைச்சர் உதயநிதியால் விளையாட்டுத் துறை சிறப்பு அடைவதுமான காட்சிகளைக் காண்கிறேன் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

# கனம் கோர்ட்டார் அவர்களே...

சமீபகாலமாக நீதித் துறை, அதிலும் குறிப்பாக உச்சநீதிமன்றம் தெரிவிக்கும் கருத்துகளும், வழங்கும் தீர்ப்புகளும் சற்று விசித்திரமாகவும், குழப்பம் ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றன. உயர்நீதிமன்றத் தீர்ப்புகளிலிருந்து உச்சநீதிமன்றத் தீர்ப்பு முரண்படுவதுண்டு. உச்சநீதிமன்ற நீதிபதிகளேகூட ஒருவருக்கு ஒருவர் முரணாகத் தீர்ப்புகள் வழங்கியதுண்டு. ஆனால், உச்சநீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிலேயே முரண் இருப்பது சமீபகாலமாகத்தான்.

அமலாக்கத் துறை இயக்குநரின் பதவி நீட்டிப்பு குறித்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஒரு சமீபத்திய எடுத்துக்காட்டு. தற்போதைய இயக்குநரின் பதவி நீட்டிப்பை ரத்து செய்து தீர்ப்பளித்த அதே நேரத்தில், நீட்டிப்பு வழங்கும் உரிமை அரசுக்கு உண்டு என்றும் தெரிவிக்கிறது அந்தத் தீர்ப்பு. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அது அரசுக்குப் பின்னடைவாகத் தோற்றமளித்தாலும், அந்தத் தீர்ப்பை முழுமையாகப் படித்தால் அரசின் நிலைப்பாட்டுக்கு வலு சேர்ப்பதாக இருக்கிறது என்பதுதான் நிஜம்.

அமலாக்கத் துறை இயக்குநர் எஸ்.கே. மிஸ்ராவுக்கு மூன்றாவது முறையாக வழங்கப்பட்ட பதவிக்கால நீட்டிப்பு சட்டவிரோதமானது என்றும், அவரது பதவிக்காலத்தை ஜூலை 31-ஆம் தேதியாக குறைத்தும் கடந்த ஜூலை 11-ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. நீதிபதிகள் பி.ஆர். கவாய், விக்ரம் நாத், சஞ்சய் கரோல் ஆகியோர் அடங்கிய அந்த மூன்று நீதிபதிகள் அமர்வு வழங்கி இருக்கும் தீர்ப்பு, எஸ்.கே. மிஸ்ராவுக்கு வேண்டுமானால் பாதிப்பைக் கொடுக்கலாம்; ஆனால், வருங்காலத்தில் அரசுக்கு மிகப் பெரிய வலு சேர்ப்பதாக அமையக்கூடும்.

2019-ஆம் ஆண்டு நவம்பர் 19-ஆம் தேதி அமலாக்கத் துறையின் இயக்குநராக நியமிக்கப்பட்டவர் எஸ்.கே. மிஸ்ரா. 2020-இல் அவரது பதவிக்காலம் நிறைவடைந்தபோது, அரசு மேலும் ஓராண்டு நீட்டிப்பு வழங்கியது. 2021-இல் இரண்டாவது முறையாக நீட்டிப்பு வழங்கியபோது பலத்த எதிர்ப்பு எழுந்தது. பலர் நீதிமன்றத்தில் அதை எதிர்த்து வழக்கும் தொடுத்தனர்.

அமலாக்கத் துறை, புலனாய்வுத் துறை (சிபிஐ) இயக்குநர்களின் பதவிக்காலமான இரண்டாண்டுகளை மூன்றாண்டுகளாக நீட்டிப்பதற்கான அவசரச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. அதன் மூலம் பணி ஓய்வு அடிப்படையில் பதவிக்காலம் முடிந்த பிறகும், மேலும் மூன்று ஆண்டுகள் அவர்கள் பதவி நீட்டிப்புப் பெற முடியும். வேடிக்கை என்னவென்றால், அது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும் பணி நீட்டிப்பாக இருக்கும் என்பதுதான்.

இரண்டு முறைக்கு மேல் மூன்றாவது முறையாக, மேலும் ஓராண்டுக்கு எஸ்.கே. மிஸ்ராவின் பதவி நீட்டிப்பை ரத்து செய்து, இந்த மாதத்துடன் அவர் பணி ஓய்வு பெற வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறது உச்சநீதிமன்ற அமர்வு. அதேவேளையில், அமலாக்கத் துறை, சிபிஐ ஆகியவற்றின் இயக்குநர்களின் பதவிக்காலத்தை அதிகபட்சமாக ஐந்தாண்டுகள் வரை நீட்டிக்கும் மத்திய அரசின் சட்டத் திருத்தத்தை அங்கீகரித்துத் தீர்ப்பளித்திருக்கிறது.

2021 நவம்பர் மாதத்துக்கு மேல் இயக்குநர் எஸ்.கே. மிஸ்ராவுக்கு பதவி நீட்டிப்பு வழங்கக் கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அதைச் செல்லாததாக்குவதற்குத்தான் மத்திய அரசு அவசரச் சட்டம் கொண்டுவந்தது. ஐந்தாண்டுகள் பதவிக்காலம் கொண்டுவரப்பட்டது. அதற்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரமும் பெறப்பட்டது.

'நீதிமன்றத் தீர்ப்பை சட்டத்தின் மூலம் அரசு ரத்தாக்க முடியும். ஆனால், நீதிமன்ற உத்தரவை ரத்தாக்க முடியாது' என்று கூறி, எஸ்.கே. மிஸ்ராவைப் பணி ஓய்வு பெறச் சொல்லும் தீர்ப்பின் அர்த்தம் புரியவில்லை. தீர்ப்பைவிட, உத்தரவு பெரிதா? இரண்டுக்கும் என்னதான் வேறுபாடு? குழப்பமாக இருக்கிறது.

அமலாக்கத் துறை, சிபிஐ இயக்குநர்களுக்கு, குறிப்பிட்ட பதவிக்கால உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பது உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல். அதன் மூலம், அவர்கள் ஆட்சியாளர்களின் அழுத்தத்துக்கு உள்ளாகாமல் இருப்பார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஒவ்வோர் ஆண்டும் அவர்கள் பதவி நீட்டிப்புக்காக, ஆட்சியாளர்களின் தயவைச் சார்ந்து இருப்பார்களேயானால், எப்படி அழுத்தத்துக்கு உள்ளாகாமல் இருக்க முடியும் என்கிற நியாயமான ஐயப்பாடு கனம் நீதிபதிகளுக்கு ஏன் எழவில்லை?

மத்திய அரசின் ஐந்தாண்டு பதவிக்கால சட்டத்தை அங்கீகரித்திருப்பதற்கு, அமர்வு நீதிபதிகள் அளித்திருக்கும் விளக்கம், குழப்பமாக இருக்கிறது. 'நாடாளுமன்றம் நிறைவேற்றி இருக்கும் சட்டத்தின் மீது கருத்துக் கூற முடியாது' என்கிற வரிகள், நீதித் துறையின் அவசியத்தையே கேள்விக்குறியாக்குகிறது. நாடாளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்கள், அரசமைப்புச் சட்ட வரம்புக்கு உட்பட்டவையா, இல்லையா என்பது குறித்துக் கருத்துக் கூறுவதுதானே நீதித் துறையின் கடமை. அதை எப்படி மிகச் சாதாரணமாக மூன்று நீதிபதிகள் அமர்வு கடந்து போனது என்பது மிகப் பெரிய புதிர்.

அமலாக்கத் துறை, சிபிஐ இயக்குநர்களின் பதவிக்காலத்தை இரண்டாண்டுகள் அல்லது ஐந்தாண்டுகள் என்றெல்லாம் நிர்ணயிக்கும் உரிமை நிச்சயமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அரசுக்கு உண்டு. அதை அங்கீகரித்திருப்பதில் குற்றம் காணவில்லை. ஆனால், குறிப்பிட்ட கால வரையறை வழங்கப்படாமல், ஒவ்வோர் ஆண்டும் பதவிக்கால நீட்டிப்பு என்பது, இயக்குநர்களை ஆட்சியாளர்களின் கைப்பாவைகளாக்கி விடும்.

யார் இயக்குநர் என்பதல்ல பிரச்னை; பொறுப்பான பதவியில் உள்ளோர் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதுதான் அவசியம். உச்சநீதிமன்றத் தீர்ப்பு அதை உறுதி செய்யவில்லை.

# சீர்குலைவில் உலகத் தமிழாராய்ச்சி மன்றம்!


பழ.நெடுமாறன்

**46 ஆண்டு காலத்துக்கும் மேலாக சிறப்புடன் செயல்பட்டுத் தமிழ் ஆராய்ச்சியை உலகத் தரத்திற்கு எடுத்துச்சென்ற இந்த அமைப்பு தற்போது பெரும் சீர்குலைவில் சிக்கியுள்ளது. இந்த அமைப்பை மீட்டு, புத்துயிர் ஊட்டி காக்க வேண்டிய கடமை உலகத் தமிழர்களுக்கும், தமிழக அரசுக்கும் உண்டு.**

கட்டுரையாளர்:
**தலைவர், உலகத் தமிழர் பேரமைப்பு.**

# குடியரசுத் தலைவராக திரௌபதி முர்மு ஓராண்டு நிறைவு

**புது தில்லி, ஜூலை 25:** நாட்டின் முதல் பழங்குடியின பெண் குடியரசுத் தலைவரான திரௌபதி முர்மு, தனது பதவிக்காலத்தில் முதல் ஆண்டை செவ்வாய்க்கிழமை நிறைவு செய்தார்.

கடந்த ஓராண்டு காலத்தில், தேசத்தின் பல்வேறு மாநிலங்களுக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் மற்றும் குடியரசு மாளிகையில் நடந்த சந்திப்புகளில் 1,750 பழங்குடிகள் உள்பட 16,000 நபர்களை அவர் சந்தித்து உரையாடியிருப்பதாக அவரது மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 குடியரசுத் தலைவர் தேர்தலில் பாஜக கூட்டணியின் வேட்பாளராகக் களம் கண்ட திரௌபதி முர்மு 2,824 வாக்குகள் பெற்று, எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் யஷ்வந்த் சின்காவை சுமார் ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

நாட்டின் 15-ஆவது குடியரசுத் தலைவராக திரௌபதி முர்மு, கடந்தாண்டு ஜூலை மாதம் 25-ஆம் தேதி பதவியேற்றார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். நாட்டின் முதல் பழங்குடியின பெண் குடியரசுத் தலைவர் என்னும் பெருமையை அவர் பெற்றார். இந்நிலையில், குடியரசுத் தலைவராக திரௌபதி முர்மு ஓராண்டை செவ்வாய்க்கிழமை நிறைவுச் செய்தார்.

**1,750 பழங்குடிகளுடன் சந்திப்பு:** திரௌபதி முர்மு பதவியேற்ற முதல் ஆண்டில் மேற்கொண்ட பணிகள் குறித்து குடியரசுத் தலைவர் மாளிகை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ராஜஸ்தான், மேற்குவங்கம், தெலங்கானா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரம், கர்நாடகம், ஒடிஸா மற்றும் உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த 1,750 பேருடன் குடியரசுத் தலைவர் முர்மு சந்தித்துப் பேசினார். மேலும், குடியரசு மாளிகை மற்றும் மாநில சுற்றுப்பயணங்களில் நடந்த சந்திப்புகளில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 16,000-க்கும் மேற்பட்டோரை அவர் சந்தித்து உரையாடி இருக்கிறார்.



புது தில்லியில் கைவினைப் பொருள் கண்காட்சியை செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு. அவர் பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

**43 மசோதாக்களுக்கு ஒப்புதல்...:** கடந்த ஓராண்டில், மத்திய அரசின் 20 மசோதாக்களுக்கும், மாநில அரசுகளின் 23 மசோதாக்களுக்கும் குடியரசுத் தலைவர் முர்மு ஒப்புதல் அளித்திருக்கிறார். 8 வடகிழக்கு மாநிலங்களில் 6 மாநிலங்களுக்கு அவர் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பயணங்களில் மிசோரம், அருணாசல பிரதேச மாநிலங்களின் சட்டப்பேரவைகளில் உரையாடியதோடு, குவாஹாட்டி உயர் நீதிமன்றத்தின் 70-ஆவது ஆண்டு விழா மற்றும் அருணாசல பிரதேச நாள் விழாவிலும் அவர் பங்கேற்றிருக்கிறார்.

**மாளிகையில் 90,000 மக்கள்...:** வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனில் உறுதியான நம்பிக்கை கொண்டவரான குடியரசுத் தலைவர் முர்மு, அவரது மாளிகைக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்த தொழில்நுட்பம் மற்றும் புதுமைகளை முழுமையாகப் பயன்படுத்த வலியுறுத்தினார்.

இந்த ஓராண்டில் சுமார் 90,000 பேர் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வருகை தந்துள்ளனர். அதேகாலத்தில், குடியரசுத் தலைவர் மாளிகை அருங்காட்சியகத்தை 1.7 லட்சம் பேர் வரை பார்வையிட்டுள்ளனர்.

**ராஜிய பயணங்கள்...:** சுரிநாம் நாட்டுக்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டபோது, குடியரசுத் தலைவர் முர்முவுக்கு அந்நாட்டின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. செர்பியாவுக்கு பயணம் மேற்கொண்ணும் முதல் இந்திய குடியரசுத் தலைவர் என்ற பெருமையையும் முர்மு பெற்றார்.

லண்டனில் நடைபெற்ற எலிசபெத் அரசியின் இறுதிச்சடங்கில் இந்தியா சார்பாக அவர் கலந்து கொண்டார். இந்த ஆண்டு குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற எகிப்து அதிபருக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் முர்மு விருந்தளித்தார்.

மேலும், 14 நாடுகளின் தலைவர்களுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டது என அந்த அறிக்கையில் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

**புதுப்பிக்கப்பட்ட வலைதளம் அறிமுகம்:** ஓராண்டு நிறைவையொட்டி குடியரசுத் தலைவர் மாளிகையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற குடியரசுத் தலைவர் முர்மு, மாளிகையில் திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி வைத்தார். குடியரசுத் தலைவரின் ஓராண்டு பணியை ஆவணப்படுத்தி மக்களுக்கு தகவலளிக்கும் வகையில் புதுப்பிக்கப்பட்ட வலைதளமும் அப்போது அறிமுகப்படுத்தப்பட்டது.

**பிரதமர் வாழ்த்து:** குடியரசுத் தலைவருக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட ட்விட்டர் பதிவில், 'பொறுப்பேற்று முதல் ஆண்டை நிறைவுச் செய்துள்ள குடியரசுத் தலைவருக்கு வாழ்த்துகள்.

பொது சேவையில் குடியரசுத் தலைவரின் அயராத அர்ப்பணிப்பும், முன்னேற்றத்துக்கான இடைவிடாத அவரது நாட்டமும் மிகவும் ஊக்கமளிக்கிறது. அவரது பல்வேறு சாதனைகள், அவரது தலைமையின் உறுதியான தாக்கத்தை பிரதிபலிக்கின்றன' எனக் குறிப்பிட்டிருந்தார்.

# விஜயா பதிப்பகத்தின் கி.ரா. விருதுக்கு எஸ்.வி.ராஜதுரை தேர்வு

**கோவை, ஜூலை 25:** கோவை விஜயா பதிப்பகத்தின் 2023-ஆம் ஆண்டுக்கான கி.ரா. விருதுக்கு எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை

இதுகுறித்து விஜயா பதிப்பக நிறுவனர் மு.வேலாயுதம் கூறியிருப்பதாவது:

கரிசல் இலக்கிய நாயகன் கி.ராஜநாராயணனின் நினைவைப் போற்றும் வகையில், கோவை விஜயா பதிப்பகத்தின் 'விஜயா வாசகர் வட்டம்' சார்பில், சிறந்த படைப்பாளிகளுக்கு ஆண்டுதோறும் 'கி.ரா.விருது' வழங்கப்பட்டு வருகிறது. விருதாளருக்கு ஈரோடு சக்தி மசாலா நிறுவனத்தின் சார்பில் ரூ.5 லட்சம் ரொக்கம், கேடயம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

2023-ஆம் ஆண்டுக்கான 'கி.ரா.' விருதுக்கு பிரபல மார்க்சிய, பெரியாரிய அறிஞர் எஸ்.வி.ராஜதுரை (83) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு கோவையில் வரும் செப்டம்பர் 17-ஆம் தேதி நடைபெறும் விழாவில், ஓய்வுபெற்ற தலைமைச் செயலர் வெ.இறையன்பு கலந்து கொண்டு விருது வழங்குகிறார்.

பல்வேறு தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபட்டு வந்த எஸ்.வி.ராஜதுரை, ச.சீ. கண்ணனுடன் (தேத்ரா) இணைந்து 1981-இல் சென்னையில் 'காரல் மார்க்ஸ் நூலகத்தை' நிறுவினார்.

1982 முதல் 2000 வரை மக்கள் உரிமைக் கழகத்தில் தேசியத் துணைத் தலைவர் பொறுப்பு வகித்து, ராம் ஜெத்மலானி, ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் போன்றோருடன் பணியாற்றினார். முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யரின் தலைமையில் இயங்கிவந்த மரணத் தண்டனைக்கு எதிரான இயக்கத்தின் அனைத்திந்திய அமைப்பாளராகச் செயல்பட்டார். ஆங்கிலத்திலும் சரளமாக எழுதும் திறன் பெற்ற இவர், குறிப்பிடத்தக்க மொழியாக்கங்களைச் செய்துள்ளார்.

2007, 2008-ஆம் ஆண்டுகளில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பெரியார் உயராய்வு மன்றத் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். இவர், பல்வேறு பதிப்பகங்கள் மூலம் 57 நூல்கள், 31 மொழிபெயர்ப்பு நூல்கள் என மொத்தம் 88 நூல்களை வெளியிட்டுள்ளார். தற்போது, மனைவியுடன் அன்னூரில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் வசித்து வருகிறார்.

இதற்கு முன்பு, எழுத்தாளர்கள் கண்மணி குணசேகரன், கோணங்கி, அ.முத்துலிங்கம் ஆகியோருக்கு 'கி.ரா.' விருது வழங்கப்பட்டுள்ளது.